**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.2/2022**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுன் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாராயணா | மதம் | : இந்து |
| த/பெ | : சீனிவாசலு நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : K.G. கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**27.06.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் வெங்கடேசன் எனக்கு என்ன உறவு என்றால் தாய் மாமா மகன் ஆவார். நான் எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் நான் கடனுறுதிச்சீட்டின் பேரில் பணம் கொடுத்தேன். அதில் ரூ.35000 வட்டி நிலுவையில் இருந்தது. ரூ.50000/- அசலாகும். அதற்கு இந்த வழக்கு தாக்கல் செய்தோம். என் அப்பாவின் தங்கைதான் பிரதிவாதியின் தாயார் என்றால் சரிதான். வெங்கடேசன் என்ன தொழில் செய்கிறார் என்றால் மருந்து கடை வைத்துள்ளார். எனது பிராமண வாக்குமூலம் பத்தி 4ல் எங்கள் ஊரை சேர்ந்த சிலர் குவைத்திற்கு செல்ல முயற்சி செய்ததாக நான் கூறியிருப்பதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. பிரதிவாதியின் மகன் குவைத்திற்கு செல்ல முயற்சி செய்ததாக நான் கூறியிருப்பதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலம் 5ம் பத்தியில் ஜெயம்மாள் என்பவரிடமும் ஆனந்தன் என்கிற ஆனந்தலு என்பவரிடமும் கடன் பெற்றதாக நான் கூறியிருப்பதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஜெயம்மாள் என்பவரும் ஆனந்தன் என்கிற ஆனந்தலு என்பவரும் பிரதிவாதி மீது சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. ஜெயம்மாள் உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். அந்த 2

வழக்கிலும் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த 2 வழக்கிலும் உள்ள கடனுறுதிச்சீட்டில் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த 2 வழக்கிலும் உள்ள கடனுறுதிச்சீட்டையும் இந்த வழக்கின் கடனுறுதிச்சீட்டையும் எழுதியது ஒரே நபரா வேறு நபரா என்றால் ஒரே நபர்தான். மொத்தம் 4 கடனுறுதிச்சீட்டை எழுதியுள்ளார். அந்த 4 கடனுறுதிச்சீட்டுகளிலும் நாங்களே மாற்றி மாற்றி சாட்சி கையெழுத்து செய்துகொண்டோம் என்றால் இல்லை. ராஜரத்தினம் என்பவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார். அந்த 4 கடனுறுதிச்சீட்டுகளும் எந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது என்றால் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)